திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த இரண்டாவது கேள்வி நான் போடுவதற்குக் காரணம், அதற்கு எல்லா ஊராட்சித் தலைவர்களும் சம்மதிக்கவில்லை, மெஜாரிட்டி ஊராட்சித் தலைவர்கள சம்மதித்தால் அந்த வேலையை துவங்கலாம் என்று சொல்லி அங்கேயிருந்து ரிப்போட் வந்துள்ளது உண்மையை மறைக்கக்கூடிய முறையில் இருக்கிறது என்று கருதுகிறேன். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, அரசாங்கம் நிதி ஒதுக்கி, திட்டம் போட்டு, பிறகு, பஞ்சாயத்துத் தலைவர்களை கன்சல்ட் செய்கிறபோது ஏகமனதாக ஒப்புதல் இருக்க வேண்டும், அப்போது தான் வேலையை ஆரம்பிக்கலாம், ஒருவர் எதிர்த்தால்கூட நிறுத்தி வைக்க வேண்டும் என்று சொல்லி அரசாங்கத்திலிருந்து ஏதேனும் உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அப்படி ஒன்றும் உத்தரவு அனுப்பப்படவில்லை. அதனுல் தான் 66 சதவீதம் ஊராட்சித் தலைவர்கள் சம்மதித்தால் அந்த வேலையைத் துவக்கலாம் என்று முடிவுக்கு வந்து இருக்கிறார்கள்.

நகராட்சிகள் திரையரங்குகள் நடத்தல்.

* 540. வினா—திரு. துரை கலியமூர்த்தி

திரு. என். கிட்டப்பா

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகராட்சிகளுக்கு சினிமா தியேட்டர் கட்ட லைசென்ஸ் கொடுக்கப்படுமா ? அரசு மானியத் தொகை வழங்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) நகராட்சி மன்றங்களே சினிமா தியேட்டர்களை கட்டி நடத்தி வருகிறதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த நகராட்சிகளில் இவ்விதம் நடைபெறுகிறது ?

(ஈ) எந்தெந்த நகராட்சிகள் அரசுக்கு இவ்வித கோரிக்கை விடுத்துள்ளன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம். தேவைப்படும்போது லைசென்ஸ் கொடுக்கப்படும். மானியம் வழங்கும் உத்தேசம் இல்லை.

1978 மார்ச் 13]

(ஆ) ஆம்.

(இ) தஞ்சாவூர் நகராட்சி, மேட்டூர் நகரியம், குற்றாலம் நகரியம.

(ஈ) தற்போது இது சம்பந்தமாக கோரிக்கை ஏதும் நகராட்சிகளிடமிருந்து வரவில்லை.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, சிதம்பரம் நகராட்சியில் இந்த மாதிரி சினிமாத் தியேட்டரை ஆரம்பிப்பதற்கான திட்டத்தை வைத்துள்ளார்கள். அதற்கு அரசாங்கம் மானியத் தொகை அளித்தால் அந்த வேலையைத் துவங்க ஏதுவாக இருக்கும். ஆகவே, அரசாங்கம் மானியம் கொடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மானியம் வழங்கும் உத்தேசம் இல்லை. ஆனால் அப்படி தியேட்டர் கட்டவேண்டும் என்று முடிவு எடுத்து, அரசுக்கு அனுப்பப்படுமானால், நிலைமையை உத்தேசித்து பரிசீலித்து முடிவுக்கு வரலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நகராட்சிகளே சினிமாத் தியேட்டர்களை நடத்தும் அடிப்படையில் தஞ்சாவூர் போன்ற நகராட்சிகள் அத்தகைய திரைப்பட அரங்குகளை நடத்தி வருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தஞ்சாவூரில் நடத்தப்பட்டு வரும் சினிமாத் தியேட்டர் லாபகரமாக நடைபெறுகிறதா, அப்படி லாபகரமாக நடந்தால் ஏனைய இடங்களிலும் அத்தகைய கோரிக்கைகள் வரும்போது, அவற்றை உடனடியாகப் பரிசீலித்து, அவைகளுக்குச் சலுகைகள் அளிக்கும் அடிப்படையில் அரசு ஏதேனும் திட்டம் வைத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தஞ்சாவூர் நகராட்சி நடத்துகிற திரையரங்கு லாபகரமாக நடந்து வருகிறது. மற்ற இடங்களில் இருந்து அதுபற்றி கோரிக்கைகள் வருமானால், அது பற்றி பரிசீலித்து முடிவு எடுக்கலாம்.

திரு. கே. பண்ணை சேதுராம் : பார்வையாளர் பகுதியில் இருந்து சட்டமன்ற நிகழ்ச்சிகளை போட்டோ எடுப்பதாகத் தெரிகிறது. சற்று முன் ப்ளாஷ் லைட் அடித்தது. அது பற்றி விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடனடியாக அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பண்ணை சேதுராம் அவர்கள் மேலேயிருந்து புகைப் படம் எடுத்ததாகச் சொன்னார்கள். அவர்களைப் போட்டோ எடுத்து விட்டு, எங்களை விட்டு விட்டார்களா, அல்லது எங்களை எடுத்து விட்டு அவர்களை விட்டு விட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற நிகழ்ச்சி களைப் புகைப்படம் எடுக்கலாமா என்பது அவர் கேள்வி. அப்படி எடுக்கக்கூடாது. அப்படி நடந்து இருந்தால், அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, நகராட்சிகள் நடத்தும் சினிமா தியேட்டர்கள் லாபகரமாக நடப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, எல்லா சினிமா அரங்குகளையும் அரசாங்கமே ஏற்று, வருமானம் பற்றுக்குறை யில் இருக்கும் நகர பஞ்சாயத்துகளுக்கு அவைகளை நடத்தும் உரிமைகளை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மூலக் கேள்வியோடு இது தொடர்பற்றது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, சில நக ராட்சி மன்றங்கள், கார்ப்பரேஷன் கூட — அந்த சினிமாத் தியேட்டர்களை உருவாக்கி தங்கள் வருமானத்தைப் பெருக்கி கொள்ளலாம். அவர்களே கூட படங்கள் எடுக்கலாம். அதற்கு பணம் வேண்டும் என்று சொன்னால், சில தனிப்பட்டவர்கள் எந்த அடிப்படையில் யாரிடமிருந்து கடன் வாங்குகிறார்களோ அந்த மாதிரி பெறுவதற்கு அவர்களுக்கும் அனுமதி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நக ராட்சி மன்றங்கள் தியேட்டர்களை நடத்துவதற்கு ஏதேனும் அனுமதி கேட்டால் அதைக் கொடுப்பது பற்றித்தான் மூலக் கேள்வி. தனிப்பட்டவர்கள் கேட்டால் கொடுக்கலாம் கொடுக்கக்கூடாது என்பது பற்றி அந்தத் துறை அமைச்சர் முடிவு செய்ய வேண்டும்.

[முற்பகல் 9—30]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, நிதி வசதி இருக்குமானால் அவர்கள் சினிமா தியேட்டர் கட்ட வேண்டு மென்று அனுமதி கேட்டால், அரசாங்கம் அதற்கு அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, கோரிக்கை எழுப்பப்பட்டால், நிலைமைகளை ஒட்டி, பரிசீலித்து முடிவு, செய்யப்படும்.

1978 மார்ச் 13]

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, வசதியுள்ள பேரூராட்சிகள்-சினிமாத் தியேட்டர் இல்லாமல் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்-தியேட்டர் கட்ட அனுமதி கேட்டால், அனுமதி கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மக்கள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பது தெரியவில்லை. வசதியுள்ள பேரூராட்சிகள் இப்படி ஒரு கோரிக்கையை எழுப்பினால் பரிசீலிக்கலாம்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : தலைவரவர்களே, குற்றாலம் நகரியத்திலிருந்து நடத்தப்படும் கலையரங்கு சீசன் காலத்தில் தான் பயன்படுகிறது. மற்ற நாட்களில் நகரியத்திற்கு வருமானம் கிடைக்கின்ற வகையில் வேறு எதற்காவது பயன் படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, குற்றாலம் நகரியத்தில் அமைந்திருப்பது திரையரங்கு அல்ல ; அது ஒரு டவுன் ஹால். நாடகங்கள் போடவும், சில சமயங்களில் திரைப்படங்கள் காண்பிக்கவும் அது பயன்படுத்தப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது, திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் கேள்வி நேரத்தின்போது ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள். பின்னால் இருக்கிற கண்ணாடிக்கதவு மூடப்படும்போது வந்த ஒளிதான் அவர்கள் குறிப்பிட்டது. அவர்கள் மன்ற நடவடிக்கையை மட்டும்தான் கவனித்துக் கொண்டிருப்பார்கள் என்று நினைத்திருந்தேன். ஆனால், அங்கே, மேலே என்ன நடக்கிறது என்றும் உன்னிப்பாக கவனித்து சொன்னதற்கு நன்றி.

இ. எஸ். ஐ. மருத்துவமனைகளில் மருந்துகள் வழங்கல்.

* 541 வினா—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இ. எஸ். ஐ. மருத்துவ மனைகளில் சாதாரணமாக வழங்கி வந்த ஐம்பதுக்கு மேற்பட்ட மருந்து வகைகள் ஸ்பெஷலிஸ்ட் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன காரணம் ? அதனால் ஏற்பட்டுள்ள விளைவுகள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS